
பக்கங்கள் 13 + 07

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 25 ஞாயிற்றுக்கிழமை 07.04.2024 அதிர்வு 251

## நீரில் மூழ்கி இருவர் சாவு



அநுராதபுரம் – கெபிதிகொல்லேவ – கொல்பெந்த குளத்தில் நீராடச் சென்ற இருவர்

04

## ஒட்டோவில் பயணித்த இருவர் சுட்டுக்கொலை



மொரகஹஹேன பகுதியில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஓட்டோவில் பயணித்த இருவர் மீது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்

04

## லொறியில் மோதி குழந்தை மரணம்!



பெற்றோருடன் ஆலயமொன்றில் குழந்தை சமய நிகழ்வுகளில் ஈடுபட்டிருந்தபோது, மேற்படி

04



# ரணிலைக் கைவிட 'மொட்டு' தீர்மானம்

### மற்றுமொரு வேட்பாளரைக் களமிறக்க முடிவு ராஜபக்ஷ குடும்பத்தின் பேச்சாளர் தெரிவிப்பு

**"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க அல்லர். மற்றுமொரு வேட்பாளரே களமிறக்கப்படுவார். இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது."**

04

பொலிஸார் மேற்கொண்ட

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு



மாவனெல்லை, பதியதொர பிரதேசத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் நபர் ஒருவர்

04




## பஸ் - மோ. சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

அக்கரைப்பற்று, கல்முனை – மாட்டுபாளையம் பகுதியில் பஸ்

04

# ரணிலுக்கே முழு ஆதரவு

### அரவிந்தகுமார் பகிரங்க அறிவிப்பு



"நாட்டில் முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்பட வேண்டும். அத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவருக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும்."

– இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில்

04



## லொறி மோதி தாதி மரணம்!

பணி முடிந்து கணவருடன் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த களுபோவில போதனா வைத்தியசாலையின்

04





# குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவில் 571 பேருக்குக் காணி ஆவணம் வழங்கல்

(எஸ்.கீதபொன்கலன்)

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் காணி ஆவணங்கள் இல்லாத 571 பேருக்கான காணி ஆவணங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று (6) காலை குச்சவெளி விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோரால் குறித்த ஆவணங்கள் மக்களிடம் கையளிக் கப்பட்டன.

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 20 கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் 571 பேருக்கு மேட்டுக் காணிகளுக்கான காணி ஆவணங்கள் வழங்கப்பட்டன.

இதில் 435 பேருக்கு காணி அனுமதிப் பத்திரங்களும் (பேமிட்), 136 பேருக்கு அளிப்பு பத்திரங்களும் (கிராண்ட்) வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது முதன்முறையாக இலத்திரனியல் அனுமதிப்பத்திர அடையாள அட்டையும் இன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. குறித்த அட்டையானது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காணிகளின் உரிமையாளரின் விவரம், காணி அனுமதிப்பத்திர இலக்கம், காணியின் அமைவிடம், காணியின் எல்லைகள் மற்றும் காணி தொடர்பான ஆவணங்கள் என்பவற்றையும், நிற்கும் இடத்தில் இருந்து காணியை சென்றடைவதற்கான பாதை விவரங்களையும் உள்ளடக்கியதாக இந்த இலத்திரனியல் அனுமதிப்பத்திர அடையாள காணப்படுவதாகவும் காணிப் பிணக்குகளை ஆராந்து விரைவான தீர்வு வழங்குவதற்காக இந்த இலத்திரனியல் அனுமதிப்பத்திர அடையாள அட்டையை முதன்முறையாக அறிமுகம் செய்துள்ளனர் என்று பிரதேச செயலாளர் கே.குணநாதன் தெரிவித்தார்.





# கிழக்கில் பிரகடனம் செய்யப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு வலயம்!

(பழுவூரான்)

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட குருக்கள்மடம் கிராமத்தில் அமைந்துள்ள ஏத்தாலைக்குளம் பாதுகாக்கப்பட்ட பறவைகள் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது கிழக்கில் முதலாவது சுற்றுச்சூழல் பாதுகாப்பு வலயமாகும்.

இதற்கான உத்தியோகபூர்வ அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று சனிக்கிழமை (06) குருக்கள்மடம் ஐயனார் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி ஜஸ்டினா முரளீதரன் மற்றும், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் தம்மிக்க கருணாரெத்தின, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்தினம், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ். ஜெகநாத், காத்தான்குடி பிரதேச செயலாளர் உ.உதயசிறீதர், மற்றும் கமலநல அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள், பாடசாலை சுற்றாடல் முன்னோடி கழக மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஏத்தாலைக் குளத்தைப் பாதுகாப்பதற்கு உரிய அதிகாரிகளுக்கான நியமனக் கடிதங்களையும் மாவட்ட செயலாளர் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# 75 மில்லியன் ரூபா செலவில் திருமலை நகரில் வீதி திருத்தம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை நகர சபைக்கு உட்பட்ட பகுதியில் சுமார் 75 மில்லியன் ரூபா செலவில் 3 கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதிக்குக் காப்பெட் இடும் பணி இடம்பெற்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் இந்தப் பாதை அபிவிருத்தி பணி இடம்பெற்றது.

இதில் மூர் வீதி, வித்தியாலயம் வீதி, வித்தியாலயம் ஒழுங்கை, கல்லூரி வீதி, சாரதா வீதி, ஔவையார் வீதி உட்பட ஒவ்வொரு வீதியும் தலா ஒரு கிலோ மீற்றர் வரை மொத்தமாக 3 கிலோ மீற்றர் தூரம்வரை காப்பெட் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான வீதி அபிவிருத்திப் பணிகள் கொரியா, சீனா போன்ற நாடுகளாலேயே இலங்கையில் மேற்கொள்ளப்பட்டன.

இன்று முதல் தடவையாக திருகோணமலையை சேர்ந்த ஒரு தனியார் நிறுவனத்தால் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனன.

இந்தப் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் குழுவின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்று வருகின்றன.



# காணி அனுமதிப்பத்திரங்கள் கிண்ணியா மக்களிடம் கையளிப்பு




(ஹஸ்பர் ஏ.எச்.)

காணி அனுமதிப் பத்திரங்கள் பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம். கனி தலைமையில் நேற்று முன்தினம் (05) பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஏற்கனவே காணிக் கச்சேரி ஊடாக தெரிவு செய்யப்பட்ட காணி உரிமையாளர்களுக்கான 81 அழிப்புகள், 39 அனுமதிப்பத்திரங்கள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரும் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவருமான செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும் கிண்ணியா பிரதேசத்தின் அபிவிருத்தி குழு தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல். எம் அதாவுல்லா, திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, கிழக்கு மாகாண காணி அமைச்சின் செயலாளர், கிண்ணியா மற்றும் குறிஞ்சாக்கேணி பிரிவு சுகாதார வைத்திய அதிகாரிகள், கிண்ணியா வலயக் கல்வி பணிப்பாளர், கிண்ணியா பிரதேசத்துக்கான தேசிய நீர் வளங்கள் வடிகால் அமைப்பு சபையின் நிலைய பொறுப்பதிகாரி, கிண்ணியா பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கிண்ணியா பிரதேச செயலக கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், கிண்ணியா பிரதேச செயலக காணி கிளை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக பிரிவு திணைக்களங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# அழைப்பு வந்தால் பொதுவேட்பாளராக களமிறங்க சம்பிக்க ரணவக்க தயாராம்

"பரந்துபட்ட அரசியல் கூட்டணியொன்று எதிர்காலத்தில் மலரவுள்ளது. அதன்மூலம் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகக் களமிறங்குமாறு கோரிக்கை விடுத்தால் அதனை ஏற்பதற்கு நான் தயார்."

– இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க எம்.பி. தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"ஜனாதிபதித் தேர்தல்தான் தற்போது நடத்தப்பட வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு எவராவது முற்பட்டால் அது வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தால் தாக்கம் செலுத்தும். வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பை எதிர்வரும் ஜுலை மாதத்துக்குள் செய்தாக வேண்டும். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறங்குமாறு எனக்கு இன்னும் கோரிக்கை விடுக்கப்படவில்லை. எதிர்காலத்தில் பரந்துபட்ட அரசியல் கூட்டணி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அந்தக் கூட்டணி கோரிக்கை விடுத்தால் பொதுவேட்பாளராகக் களமிறங்கத் தயார்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ரணிலைக் கைவிட...

– இவ்வாறு ராஜபக்ஷ குடும்பத்தின் பேச்சாளர் எனக் கருதப்படும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"மொட்டுக் கட்சியின் வேட்பாளர் ரணில் அல்லர் என்பது அவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மற்றுமொரு கட்சி, கூட்டணியில்தான் ரணிலுக்கு களமிறங்க வேண்டிவரும்.

மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலில் தம்மிக்க பெரேரா இன்னும் உள்ளார். பஸில், நாமல் ஆகியோருடன் அவர் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு மொட்டுக் கட்சி விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி ஏற்காததால், இது பற்றி ஜனாதிபதி ரணிலுக்குத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் உள்ள அரசியல்வாதிகளுள் பஸில் ராஜபக்ஷ வுடனேயே இந்தியாவுக்குக் கௌரவமான உறவு உள்ளது." – என்றார்.

### லொறியில்...

குழந்தை பெற்றோரின் கவனத்தில் இருந்து தப்பி வீதிக்கு வந்தபோது லொறியில் மோதி உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை, பிபில பிரதான வீதியில் நாமல் ஓயா பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த குழந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துள்ளது.

நேற்றிரவு இடம்பெற்ற இந்த விபத்தில் அம்பாறை, நாமல் ஓயா பகுதியைச் சேர்ந்த 2 வயது 7 மாதங்களேயான குழந்தையே உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### துப்பாக்கிச்...

உயிரிழந்தார்.

மாவனெல்லை, பதியதொர பிரதேசத்தில் தகராறு ஒன்று ஏற்பட்டுள்ளது என்று மாவனல்லை பொலிஸாருக்குத் தொலைபேசி அழைப்பு வந்த நிலையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

இதன்போது தகராறில் ஈடுபட்ட நபர் ஒருவர், பொலிஸ் அதிகாரி ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கினார்.

இதையடுத்து மற்றுமொரு பொலிஸ் அதிகாரி வானத்தை நோக்கிச் சுட்டார் எனவும், பின்னர் மேற்படி நபர் அந்தப் பொலிஸ் அதிகாரியையும் தாக்க முற்பட்டபோது இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலை நடத்த வந்த நபரின் தந்தை துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மாவனெல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவர் எனவும், அவர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் குற்றவாளி எனவும் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் தற்போது மாவ னெல்லை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் பொலிஸார் கூறினர்.

பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார் எனவும், அவரைக் கைது செய்வதற்கான விசேட நடவடிக்கையை மாவனெல்லை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

### பஸ் - மோ. சைக்கிள்...

ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதியைப் பொலிஸார் கைது செய்தனர்.

நிந்தவூர், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த 72 வயதுடைய வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தார்.

பொத்துவில் இருந்து கல்முனை நோக்கிப் பயணித்த தனியார் பஸ், நிந்தவூர் மாட்டுபாளையம் சந்திக்கு அருகில் அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியின் வலது பக்கம் திரும்பிய நிலையில், பின்னால் வந்த பஸ் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற வயோதிபர் சம்பவ இடத்திலே உயிரி ழந்தார்.

இதனையடுத்து உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நிந்தவூர் வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### லொறி...

தாதி மீது சீமெந்து ஏற்றிக்கொண்டு சென்ற லொறி மோதி விபத்துக்குள்ளாகியதில் அவர் உயிரிழந்தார் என்று பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

பிலியந்தலை, ஜாலியகொட விஜய மாவத்தை பிரதேசத்தில் வசித்து வந்த தினுஷா கிரிஷாந்தி லியனகே என்ற 47 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே விபத்தில் சாவடைந்தார்.

வார்டு எண் 11 இன் தலைமை செவிலியராக அவர் பணிபுரிந்தார். இந்த விபத்தில் அவரது கணவருக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்

உயிரிழந்த தாதியின் கணவரும் தனியார் வைத்தியசாலை ஒன்றில் தொழில்நுட்ப முகாமையாளராகக் கடமையாற்றுகின்றார் என்றும், பணியை முடித்துக் கொண்டு களுபோவில போதனா வைத்தியசாலைக்கு அருகில் சென்று மனைவியையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு அவர் சென்றிருந்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

### நீரில் மூழ்கி...

நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த 38 மற்றும் 58 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளனர்.

மது அருந்திய சிலர் நீராடுவதற்காக சென்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

### ஓட்டோவில்...

பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். உயிரிழந்த இருவரும் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இரத்தி னபுரி பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட்டு வந்துள்ளனர்.

அவர்கள் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று மீண்டும் வீடு திரும்புகையில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளனர். பன்னிப்பிட்டிய மற்றும் பிலியந்தலையைச் சேர்ந்த இருவரே உயிரிழந்துள் ளனர்.

### ரணிலுக்கே..

ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் 2025 ஆகஸ்டில்தான் முடிவடைகின்றது. எனவே, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே ஏற்புடையதாக அமையும். அதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு அவசியம். கடந்தமுறை சம்பள நிர்ணய சபை ஊடாகவே தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டது. இம்முறையும் அவ்வாறு நடக்கும் என நம்புகின்றேன்." – என்றார்.

# மட்டு.காந்திப் பூங்காவில் ஆன்மீகக் கண்காட்சி!





**(பழுவூரான்)**

மட்டக்களப்பு பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலையத்தின் ஏற்பாட்டில் உலக ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு 'ஆக்க பூர்வமான ஆரோக்கியம்' எனும் தொனிப் பொருளில் ஆன்மீகக் கண்காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை (07) மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கண்காட்சி 'ஆரோக்கிய வினாடி வினாக்கள்', 'விழுமியச் சக்கரம்', 'ஆரோக்கியக் கண்காட்சி' ஆகிய விட யங்களை சித்திர வடிவில் அமைந் திருந்தது. அத்தோடு ஆரோக்கியம் சார்ந்த புத்தக விற்பனையும் இடம் பெற்றது.

இந்தக் கண்காட்சியைப் பார்வையிட பெருமளவிலான பொது மக்கள் வருகை தந்திருந்ததைக் காணமுடிந்தது.

இதன்போது வருகை தந்தோருக்கு பிரம்மகுமாரிகள் இராஜயோகத்தினரால் உடல், உள, சமுதாய, ஆன்மீக ஆரோக் கியம் தொடர்பாக விரிவாக விளக்கம ளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# இராணுவத்தின் 241 படைப்பிரிவுக்கு பாதுகாப்புக் காலணிகள் வழங்கல்

**(றியாஸ் ஆதம்)**

இலங்கை இராணுவத்தின் 241 படைப் பிரிவுக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் ஒருதொகுதி பாதுகாப்புக் காலணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் காலணிகளை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸ டீன் இராணுவத்தின் 241 படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் எல்.எ ஸ்.டீ.என்.பதிரத்னவிடம் வெள் ளிக்கிழமை (05) கையளித்தார்.

இந்த நிகழ்வில் பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம். எஸ்.இர்ஷாட்டும் கலந்துகொண்டார்.

இராணுவத்தின் 241 படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் எல்.எஸ். டீ.என்.பதிரத்னவால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் இவை வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மைத்திரிக்குப் போதாத காலம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இது போதாத காலம் போலும். மங்கு சனி கிரக நிலை அவரைப் பீடித்திருக்கலாம்.

அவர் திரும்பிய பக்கம் எல்லாம் முடக்குப்பாடு.

கூரையைப் பிய்த்துக் கொண்டு கடவுள் கொடுத்த மாதிரித்தான் நாட்டின் ஜனாதிபதிப் பதவி அவருக்கு அதிர்ஷ்டமாகக் கிடைத்தது. அதை வைத்துக் கொண்டுதான் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை பிடுங்கி எடுத்தார் அவர்.

இரண்டு பதவிகளும் - நாட்டின் ஜனாதிபதிப் பதவியும், சுதந்திரக் கட்சித் தலைவர் பதவியும் - அவர் கண்களை மறைத்து விட்டன. அதனால், ஏறிய ஏணிகளை எட்டி உதைத்தார். கவர்ச்சிகரமான, ஆளுமையுள்ள அரசியல் தலைவர் தாம் என்ற கற்பனாவாத சிந்தனையில் காய்களை நகர்த்தினார். அதன் விளைவை எதிர்கொள்ளும் மங்கு சனி நிலையில் வந்து நிற்கின்றார் அவர்.

சரியோ, பிழையோ 2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்று - அதுவும் வல்லமையும், தென்னிலங்கை மக்களிடையே பெருங் கவர்ச்சியும் மிக்க மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்து - ஜனாதிபதியாவதற்கு பிரதான காரணகர்த்தா ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான். தனது வேட்பாளர் பதவியை மைத்திரிக்கு விட்டுக் கொடுத்து, மைத்திரிக்காக முழு மூச்சாக உழைத்து, மைத்திரியை ஜனாதிபதியாக்கினார் ரணில் விக்கிரமசிங்க என்பதுதான் உண்மை.

ஆனால் அதிகாரத்துக்கு வந்து கொஞ்ச நாள்களிலேயே - அதுவும் சுதந்திரக் கட்சியின் தலைமையை தனது அப்போதைய அதிகாரத்தை வைத்து மஹிந்த ராஜபக்ஷ விடம் இருந்து பறித்த நாள் தொட்டே - அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மிக கேவலமாகவும் மோசமாகவும் நடத்தினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

செய்நன்றி கொன்றார் மைத்திரி. அதனால் அவருக்கு அரசியலில் இனி உய்வில்லை என்பது தெளிவாகி வருகின்றது.

சுதந்திரக் கட்சியில் அவரது தலைமைப் பதவியை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடை நிறுத்தியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் கட்சியின் மூத்த நிர்வாகிகள், பிரமுகர்கள், அடுத்த கட்டத் தலைவர்கள் எல்லோரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் திரண்டு வியூகமிட்டு வருகின்றனர்.

நீதிமன்றத்தில் வாதாடி சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை மைத்திரிபால சிறிசேனா மீட்டெடுத்தாலும், அந்தக் கதிரையில் அவர் ஸ்திரமாக இருந்து கட்சி பரிபாலனம் செய்வது இனி இலகுவானதாக இருக்கப்போவதில்லை. காத்திரமானதாக அதை அவர் முன்னெடுப்பது கஷ்டமானது.

கட்சிச் செயலாளராக இருந்த தயாசிறி ஜயசேகராவை தம் இஷ்டப்படி ஒரே நாளில் அந்தப் பதவியில் இருந்து துரத்திய நடவடிக்கையுடன் கட்சிக்குள் மைத்திரியின் சரிவு உறுதியாகத் தொடங்கிவிட்டது.

போகின்ற போக்கில் கட்சித் தலைமைப் பதவியில் இருந்து மட்டுமல்ல, இக்காலகட்டத்தில் இழைக்கப்பட்ட கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக வரும் காலத்தில் கட்சியிலிருந்தே அவர் துரத்தப்படும் நிலைமை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இதற்கிடையில் ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகள் தொடர்பில் தனக்குத் தெரியும் என்று விட்டேத்தியாகக் கருத்துக் கூறப்போய் விவகாரமாக மாட்டிக் கொண்டிருக்கிறார் அவர்.

ஏற்கனவே குற்றப்புலனாய்வுத் துறை அவரை நோண்டி எடுத்துள்ளது. அவரது வாக்குமூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து நேரத்துடனேயே அதனைத் தடுக்க முன்னெச்சரிக்கைத் தகவல்களை போதிய விவரங்களுடன் இந்திய உளவுப் பிரிவு ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான அப்போதைய அரசுக்கு வழங்கி இருந்தது.

அவற்றை வைத்து உரிய பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது மைத்திரி அரசின் நிர்வாகம். இப்போது அதே இந்தியா மீது தாக்குதலுக்குப் பொறுப்பு என்ற குற்றச்சாட்டை எதுவித ஆதாரங்களும், அடிப்படைகளும் இல்லாமல் முன் வைத்திருக்கின்றார் மைத்திரியார்.

அவரது வாக்குமூலம் தொடர்பில் எதிர்வரும் 24,25,26 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விசேட விவாதம் நடக்க இருக்கின்றது. அப்போது எல்லாக் கட்சியினரும் மைத்திரியின் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டைப் பிய்த்துதறுவர் என்பது நிச்சயம்.




# குடுவில் அறபா நகர் வீடுகளுக்கு சூரியசக்தி மின் இணைப்பு வழங்கல்

(றியாஸ் ஆதம்)

இறக்காமம், குடுவில் அறபா நகர் கிராமத்தில் மின்சார வசதி இல்லாமல் மிக நீண்ட காலமாக பல்வேறு சிரமங்களுடன் வாழ்ந்து வந்த சுமார் 35 குடும்பங்களுக்கு தனவந்தர்களால் சூரிய சக்தி மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

35 குடும்பங்களுக்குமான மின் இணைப்பை உத்தியோக பூர்வமாக வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (05) இடம்பெற்றது.

சமூக செயற்பாட்டாளர் தேசகீர்த்தி எஸ்.எம்.சன்சீர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸடீன் மற்றும் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஷ்ஷான் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இதன்போது பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிர், இறக்காமம் பொலீஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம்.ஐ. ஜஃபர், கிராம உத்தியோகத்தர்களான ஏ.சீ.எம்.சமீர், எம்.ஜே.எம்.அதீக், சமூக சேவையாளர் ஜிப்ரி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உரையாற்றுகையில்,

அடிப்படை வசதிகளின்றி மிகவும் கஷ்டத்துடன் வாழும் இந்தக் கிராம மக்களின் நலன் கருதி தனவந்தர்கள் முன்வந்து மின்சார வசதியை ஏற்படுத்தி கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

இங்குள்ள மக்கள் கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர். இவர்களின் சுகாதார ரீதியான பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு இந்தக் கிராமத்தில் மருத்துவ முகாம்களை நடாத்துவதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்வேன்.- எனத் தெரிவித்தார்.





# காசா மக்களுக்கு மனிதாபிமான உதவி!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பலஸ்தீனில் இடம்பெற்று வரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட காசா மக்களுக்காக மனிதாபிமான முறையில் அவர்களின் துயர் துடைக்கும் எண்ணத்துடன் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கல்வி சார் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து ஒரு தொகைப் பணத்தைக் (05) கல்முனை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ. ஜாபிரிடம் கையளித்துள்ளனர்.

பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத், பிரதி அதிபர் எம்.றீ.ஏ.முனாப் ஆகியோர் இணைந்து இதனைக் கையளித்தனர்.





# மட்டக்களப்பில் இரத்ததானம்!

(பழுவூரான்)

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த உறவுகளின் 5 ஆம் வருட நினைவாக “உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம்” எனும் தொனிப் பொருளில் ஹெல்ப் எவர் நடத்திய இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை (07) மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த வைத்திய முகாமில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கி வைத்தியர் திருமதி கீர்த்திகா மதனழகன் , தாதியர் உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது ஹெல்ப் எவர் நிறுவன உறுப்பினர்கள்,பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வில் குருதியைத் தானமாக வழங்கிய குருதிக் கொடையாளர்களுக்கு இந்த அமைப்பால் சான்றிதழ் வழங்கப்பட்டது.







# விளையாட்டு உபகரணங்கள் பாடசாலைகளுக்கு வழங்கல்!

(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிராமிய வீதிகள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் பங்குபற்றுதலுடன் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (6)இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி .ஜஸ்டினா முதளிதரன் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.

பிரதேச செயலக பிரிவில் உள்ள களுதாவளை மகா வித்தியாலயம், தேற்றத்தீவு மகா வித்தியாலயம், குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலய மாணவர்களின் விளையாட்டு திறனை அபிவிருத்தி செய்வதற்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேச பாடசாலை மாணவர்கள் தேசிய மட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் பல வருடங்களாக தமது திறமைகளை நிரூபித்து வருகின்றனர்.

இந்த நிகழ்வில் தடை தாண்டல் ஓட்டப் போட்டிக்கான உபகரணங்கள், பரிதி வட்டம், ஈட்டிகள், கூடைப்பந்து, கால்பந்து போன்ற விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரன், பட்டிருப்பு கல்வி வலய உதவிக் கல்வி பணிப்பாளர் (உடற்கல்வி) த.இதயகுமார், பாடசாலைகளின் அதிபர்கள், இராஜாங்க அமைச்சரின் இணைப்பாளர் த.தஜிவரன், பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொணடனர்.







# மட்டு.அமிர்தகழியில் இரத்ததான முகாம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் அமிர்தகழி கழகம் ஆகியன இணைந்து நடத்திய இரத்ததான முகாம் நேற்று சனிக்கிழமை (06) அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய அறநெறிப் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த முகாமில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கி வைத்தியர் கிருஷ்ணமூர்த்தி டிலுசா, தாதிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய வண்ணக்குமார், நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அமிர்தகழி கழக உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# கிழக்கு பிரதி மாகாண ஆணையாளராக அக்கரைப்பற்று வைத்தியர் நபீல் நியமனம்!



(அபு அலா)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பிரதி மாகாண ஆணையாளராக அக்கரைப்பற்றைச் சேர்ந்த வைத்தியர் எம்.ஏ.நபீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான பதவியுயர்வு நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் (06) திருகோணமலையில் வைத்து வழங்கினார்.

கொழும்பு சுதேச மருத்துவபீடத்தில் மருத்துவக் கல்வியை முடித்து யுனானி வைத்தியராக 2001.10.15 ஆம் திகதி பட்டம் பெற்ற அதேவேளை, களனி பல்கலைக்கழகத்திலும் இணைந்து கொண்டு சுதேச வைத்தியத்துறையிலும் பட்டம் பெற்ற இவர், வைத்தியராக நியமனம் பெற்று கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட வேரான்கட்டுக்கொட, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர் போன்ற ஆயுள்வேத வைத்தியசாலைகளில் வைத்திய பொறுப்பதிகாரியாகவும், வைத்திய அத்தியட்சகராகவும் பணி செய்து, கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளராகவும் பணியாற்றி வந்தார்.

இந்த நிலையில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள பிரதி மாகாண ஆணையாளர் வெற்றிடத்துக்கான இடைவெளியை பூர்த்தி செய்யும் நோக்கில், கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலகத்தால் நடத்தப்பட்ட கிழக்கு மாகாண வைத்தியர்களுக்கான நேர்முகத் தேர்வில் அதிக புள்ளிகளைப்பெற்று கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள பிரதி மாகாண ஆணையாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# ஐக்கிய மக்கள் சக்தியின் கலந்துரையாடல் கற்பிட்டியில்

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச ஐக்கிய மக்கள் சக்தியின் உயர் பீட அங்கத்தவர்களு டனான விசேட கலந்துரையாடல் கற் பிட்டி ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப் பாளர் எம் எப்.எம் நில்மியாஸ் தலை மையில் அவரின் இல்லத்தில் நடை பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்டம் மற்றும் புத்தளம் தொகுதி அமைப்பா ளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹெக்டர் அப்புஹாமி கலந்து கொண் டார்.

இதில் கற்பிட்டி நகருக்குள் வெற்றிட மாக காணப்பட்ட மண்டலக்குடா வட் டாரத்துக்கான வேட்பாளராக எம்.எஸ். எம் ஹிஸ்மி ஆசிரியரை அமைப்பாளர் நில்மியாஸ் முன்மொழிய சபையோர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

அத்தோடு புத்தளம் தொகுதிக்குச் சம அதிகாரத்துடன் கூடிய முஸ்லிம் அமைப்பாளர் ஒருவர் நியமிக்கபட வேண்டியதன் தேவைப்பாடு பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மே தினக் கூட்டம் தொடர்பாகவும் அதற்கான ஏற்பாடுகளைக் கற்பிட்டியில் மேற்கொள்வதற்கான பொறுப்புகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. கற்பிட்டி நகர உள்ளூராட்சி மன்ற வேட்பா ளர்களுக்கு அதற்கான வேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறையில் றமழான் அன்பளிப்பு!




**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

புனித றமழான் மாதத்தை முன்னிட்டு கல்முனை றஹ்மத் பவுண்டேசன் அமைப்பானது அம்பாறை மாவட் டத்தின் பல பிரதேசங்களிலும் நோன்பு திறக்கும் இப்தார் ஏற்பாடுகளையும் மனிதாபிமான உதவிகளையும் முன் னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் சம்மாந்துறை பிர தேச சபை உறுப்பினர்களான எஸ். எம்.நிலுபா மற்றும் எஸ்.நளீம் ஆகி யோர் மூலம் சம்மாந்துறையின் சில கிராமங்களில் அடையாளப்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கு சனிக்கிழமை (06) இந்த அமைப்பால் பேரீச்சம்பழப் பொதிகள் வழங்கி வைப்பட்டுள் ளன.

பவுண்டேசன் ஸ்தாபகரும் கல் முனை மாநகர முன்னாள் பிரதி முதல் வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செய லாளருமான றஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இவற்றை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்களுடன் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறை மத்திய குழுச் செயலாளரும் திடீர் அனர்த்த முகாமைத்துவ உத்தியோ கத்தருமான ஏ.எஸ்.எம். அஸாருதீன் உட்பட நலன் விரும்பிகள், பயனா ளிகள், பவுண்டேசன் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி முதல்வர் பா.ஜ.கவின் கைப்பொம்மையாக இருக்கிறார்

## முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு



"பொலிஸ் துறையில் பதவிக்காலம் முடிந்ததும் அவர்களை எல்லாம் ஆளுநர்களாக்கி, அரசியல்சட்டத்தை மீறி பா.ஜ.கவின் முகவர்கள் போன்று விளம்பரத்துக்காகவே செயல்படுகிறார்கள். இப்படி ஆளுநர்கள் தொல்லை கொடுப்பது, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு மட்டும்தான் என்று நினைக்காதீர்கள். அதிலும் புதுச்சேரி விதிவிலக்கு. இங்கு ஆளும் பா.ஜ.க. கூட்டணி கட்சி முதல்வர் ரங்கசாமிக்கும் ஏகப்பட்ட நெருக்கடி."

– இவ்வாறு புதுச்சேரியில் நடந்த பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று புதுவையில் நடைபெற்ற 2024 மக்களவைத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு, இண்டியா கூட்டணியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் வைத்திலிங்கத்தை ஆதரித்து உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதுச்சேரியின் வளர்ச்சிக்குத் தி.மு.கவும் காங்கிரசும் பாடுபட்டுக்கொண்டிருக்கும் அதேநேரத்தில், புதுச்சேரியை எப்படியெல்லாம் பின்னோக்கிக் கொண்டு செல்லலாம் என்று பா.ஜ.க. செயல்படுகிறது. இதைப் புதுச்சேரி மக்கள் தொடர்ந்து பார்த்துக் கொண்டு வருகிறீர்கள்.

இங்கு நம்முடைய வேட்பாளராக இருக்கும் வைத்திலிங்கம் சட்டப் பேரவைத் தலைவராக இருந்தபோது, அவருடன் மோதினார் ஒரு துணை நிலை ஆளுநர். பா.ஜ.கவின் கட்சிப் பொறுப்பில் இருக்கிறவர்களைப் புதுச்சேரி சட்டமன்றத்தில் நியமன உறுப்பினராக போட்டு, சட்டமன்ற ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாக்கினார், ஒரு துணைநிலை ஆளுநர். அதுமட்டுமல்ல, ஆட்சியில் இருந்த அரசையே புறக்கணித்துவிட்டு, அவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மக்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து தராமல், அந்த வசதிகள் இல்லை என்று காரணம் காட்டி ரேஷன் அரிசியைத் தடை செய்தார். புதுச்சேரியில் பொங்கலுக்கு தரும், வேட்டி-சேலை, இலவச அரிசி எல்லாம் எதற்கு என்று கேள்வி கேட்டார். இப்படி செய்தவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல்வராக இருந்த நம்முடைய நாராயணசாமிக்கு ஒத்துழைக்காமல் அரசியல் சட்டக் கடமையைக் காற்றில் பறக்கவிட்டு, புதுச்சேரி நிர்வாகத்தைச் சீர்குலைத்தது பா.ஜ.க. இப்படி செயல்பட்டது யார் என்றால், துணைநிலை ஆளுநராக இருந்த கிரண் பேடி. ஐ.பி.எஸ். ஆக இருந்தவர் அவர். சட்டத்தை நிலைநாட்ட பொலிஸாக வேலை பார்த்த அவரே, துணைநிலை ஆளுநராக அரசியல் சட்டத்தை மீறி செயல்பட்டார்.

இப்படி, தமிழகத்திலும் ஒரு ஆளுநர் இருக்கிறார். அவரும் ஐ.பி.எஸ். ஆக இருந்தவர்தான். நான் பல நேரங்களில் சொல்வதுண்டு, அவர் தொடர்ந்து இருக்கட்டும். அவர் இருந்தால், தி.மு.கவுக்கு அங்கு பெரிய பிரச்சாரமே நடந்து கொண்டிருக்கிறது. பொலிஸில் பதவிக்காலம் முடிந்ததும் இவர்களை எல்லாம் ஆளுநர்களாக்கி, அரசியல்சட்டத்தை மீறி பா.ஜ.கவின் ஏஜெண்டுகள் போன்று விளம்பரத்துக்காகவே செயல்படுகிறார்கள். இப்படி ஆளுநர்கள் தொல்லை கொடுப்பது, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு மட்டும்தான் என்று நினைக்காதீர்கள். அதிலும் புதுச்சேரி விதிவிலக்கு. இங்கு ஆளும் பா.ஜ.க. கூட்டணி கட்சி முதல்வர் ரங்கசாமிக்கும் ஏகப்பட்ட நெருக்கடி." – என்றார்.

# கேஜ்ரிவால் கைதுக்கு எதிராக ஆம் ஆத்மி உண்ணாவிரதம்




ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும் டில்லி முதல்வருமான அரவிந்த் கேஜ்ரிவாலை அமலாக்கத்துறை கடந்த வாரம் கைது செய்தது.

இந்த நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆம் ஆத்மி கட்சியினர் இன்று இந்தியா முழுவதும் மாபெரும் உண்ணாவிர போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இதற்கு எதிராக பா.ஜ.கவினரும் டில்லியில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

டில்லி ஜந்தர்மந்தரில் மாபெரும் உண்ணாவிரதம் காலை 10 மணிக்கு தொடங்கி நடந்து வரும் வேளையில், இந்தியாவின் 25 மாநிலங்களில் உள்ள தலைநகரங்களுடன், நியூயோர்க், பாஸ்டன், லொஸ் ஏஞ்சல்ஸ், வொஷிங்டன், டோரோன்டோ, மெல்போர்ன் மற்றும் லண்டன் ஆகிய இடங்களிலும் உண்ணாவிரதம் இடம்பெறுகின்றது.

டில்லியில் நடந்து வரும் போராட்டத்தில் ஆம் ஆத்மி கட்சி எம்.எல்.ஏகள், எம்.பிகள், கட்சி அலுவலர்கள், தொண்டர்கள் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

உண்ணாவிரத போராட்டத்தில் பங்கேற்றுள்ள டில்லி அமைச்சர் அதிஷி கருத்து தெரிவிக்கையில்,

"அரவிந்த் கேஜ்ரிவாலை டில்லி மக்கள் மிகவும் நேசிக்கின்றனர். அவர்கள் கேஜ்ரிவாலை முதல்வராக பார்க்கவில்லை. மாறாக அவர்களின் வீட்டின் மகனாகவோ, சகோதரனாகவோ பார்க்கிறார்கள்.

அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு பிணை வழங்கப்படவேண்டும் என்று அனைத்து மக்களும் விரும்புகின்றனர். மதுபான கொள்கை ஊழல் என்று சொல்லப்படும் இந்த வழக்கில் ஆம் ஆத்மி கட்சித் தலைவர்களின் வீடுகளில் இருந்து பா.ஜ.கவின் அமலாக்கத்துறை மற்றும் சி.பி.ஐ ஆல் ஒரு ரூபாயைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த விவகாரத்தில் அப்படி ஏதாவது பணம் புழக்கம் நடந்திருந்தால் அது மதுபான வியாபாரி ஷரத் ரெட்டியிடம் இருந்து பா.ஜ.கவுக்கு சென்றதுதான். ஏன் பா.ஜ.க. மீது குற்றம் சாட்டப்படவில்லை, சோதனை நடத்தப்படவில்லை. பா.ஜ.கவின் தேசிய தலைவருக்கு சம்மன் அனுப்பப்படவில்லை, அவர் கைது செய்யப்படவில்லை" – என்றார்.

ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த ஜாஸ்மின் ஷா கூறுகையில், "சர்வாதிகாரத்துக்கு எதிரான குரலை உயர்த்துவதற்காக ஆம் ஆத்மி கட்சி இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது" – என்றார்.



# இஸ்ரேலில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்துள்ளனர்





காசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளை மீட்பதற்கான ஒப்பந்தம் ஒன்றை வலியுறுத்தி இஸ்ரேலில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிரான தரப்பினர் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் தரப்பினருக்கும் இடையிலான போர் ஆரம்பித்து சுமார் 6 மாதங்களாகின்றன.

இந்த நிலையில் அங்கு முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் காசாவில் பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்களும் கலந்து கொண்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

# மெக்சிகோவில் வெடி விபத்து; ஒருவர் பலி, 15 பேர் காயம்

கிழக்கு மெக்சிகோவின் பாப்லோ பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 15 பேர் காயமடைந்துள்ளனர்.

எரிவாயு கசிவு காரணமாக இந்த வெடி விபத்து ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், வெடி விபத்து காரணமாக 30 முதல் 50 கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





கனடா முரசு
பக்கங்கள் - 7
ஞாயிற்றுக்கிழமை 07/04/2024

## கனடா – சீனா உறவை மேம்படுத்த நடவடிக்கை

ஒன்ராரியோ, ஏப்ரல் 07
ஒட்டாவாவுடன் நெருக்கமான தொடர்பை கட்டியெழுப்புவதற்கு பெய்ஜிங் கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. C2





# முதல் பெண் லெப்டினன்ட் கவர்னரான லோனா கெம்பெக்நோலா காலமானர்

**பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல் 07**
**பிரிட்டிஷ் கொலம்பியாவின் முதலாவது பெண் லெப்டினன்ட்-கவர்னரான லோனா கெம்பெக்நோலா தனது 91 வயதில் உயிரிழந்துள்ளார்.**

**இந்தச் செய்தியை கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உறுதி செய்துள்ளார்.**

**பிரிட்டிஷ் கொலம்பியாவின் 2. ஆவது லெப்டினன்ட்- கவர்னராக 2001ஆம் ஆண்டில் லோனா கெம்பெக்நோலா நியமிக்கப்பட்டார்.**

இந்த வகிபாகத்தை வகித்த முதலாவது பெண்ணாக லோனா விளங்கியதுடன், 2007ஆம் ஆண்டு வரை அந்த பதவியில் அவர் இருந்தார்.

லெப்டினன்ட்-கவர்னராக இருந்த காலப்பகுதியில் காலநிலைச் செயற்பாடு, பால்நிலை சமத்துவம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான மிகச் சிறந்த பங்களிப்பினை லோனா கெம்பெக்நோலா வழங்கியிருந்தார் எனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.



# தாய்வான் நிலநடுக்கத்தின் போது காணாமற்போன கனேடியர் மீட்பு

## அவர் பாதுகாப்பாக இருப்பது கண்டறிவு

தாய்வானின் கிழக்கு கடற்கரையோரத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்துக்கு பிறகு காணாமல் போன கனேடிய குடிமகன் கண்டுபிடிக்கப்பட்டு பாதுகாப்பாக இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரத் தொடக்கத்தில் தைவானில் 7.2 ரிக்டர் என்ற அளவு நிலநடுக்கம் ஏற்பட்டு, பரவலாக சேதத்தை ஏற்படுத்தியதுடன், இதில் ஆயிரக்கணக்கான மக்கள் சிக்கித் தவித்தனர். குறைந்தது 10 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாறை சரிவுகள் மற்றும் பிற நிகழ்வுகள் காரணமாக 636 பேர் சிக்கித் தவித்து C2



# வான் - பெரிய சரக்கு டிரக் மோதியதில் ஒருவர் சாவு!

கியூபெக், ஏப்ரல் 07

நேற்று ஏப்ரல் 6ஆம் திகதி காலை மொன்ட்ரியலுக்கு மேற்கே 70 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பிரவுன்ஸ்பர்க்-சத்தாம், கியூவில், ஒருவர் ஓட்டிச் சென்ற வான் ஒரு பெரிய சரக்கு டிரக் மீது மோதியதில் 60 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கியூபெக் நெடுஞ்சாலை 50இல் விபத்து நடந்த இடத்திற்கு அதிகாலை 1:30 மணியளவில் அவசர சேவைகள் பிரிவு அழைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வான் அதன் பாதையில் இருந்து விலகி எதிரே வரும் போக்குவரத்தில் நுழைந்த பிறகு லாரி மீது மோதியதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடுங்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நபர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதே நேரத்தில் டிரக் ஓட்டுநருக்கு காயம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.




## தாய்வான்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர் எனவும் அவர்களை மீட்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கிழக்கு கடற்கரையோரத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்துக்கு பிறகு காணாமல் போன கனேடியக் குடிமகன் கண்டுபிடிக்கப்பட்டு பாதுகாப்பாக இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கனடா உலக விவகாரங்கள் துறை அதிகாரிகள், காணாமல் போன குடிமகன் குறித்து உள்ளூர் அதிகாரிகளுடன் தொடர்பில் இருக்கின்றார் என உறுதிப்படுத்தியுள்ளனர். மேலும், மகிழ்ச்சியான இந்த செய்தியை அவரது குடும்பத்தினருக்கு தெரிவிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தாய்வானின் மத்திய அவசர நடவடிக்கை மையத்தை மேற்கோள் காட்டி, மத்திய செய்தி நிறுவனம் வெளியிட்ட முந்தைய அறிக்கைகளில், அந்த கனேடியர் தாரோகோ தேசிய பூங்காவில் உள்ள ஒரு ஹோட்டல் அருகே முகாமிட்டு இருக்கின்றார் எனக் கூறப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து முன்னதாக மூன்று கனேடியர்கள் மீட்கப்பட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தாய்வானில் 5,500 க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட கனடியர்கள் வசித்து வருகின்றனர் எனத் தாய்வான் வெளியுறவுத் துறை முன்னதாக தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## கனடா - சீனா...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரு நாடுகளுக்கும் இடையில் சுமுகமான தொடர்பை பேணுவதற்கு இந்த சிறந்த சந்தர்ப்பம் எனவும், கனடா அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும், அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கனடாவுக்கும், சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் ஏற்பட்டுள்ள நிலை உண்மையில் தாம் எதிர்பார்க்கும் ஒன்றல்ல என கனடாவுக்கான சீனத் தூதுவர் கொங் பெய்வு தெரிவித்துள்ளார்.

இணக்கமான, சுமுகமான உரையாடலை நாம் ஆரம்பிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வருட ஆரம்பத்தில் சீன வெளிவிவகார அமைச்சர் வோங் யியுடன், கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி நீண்ட தொலைபேசி உரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, பெப்ரவரி மாதத்தில் ஜெர்மனியில் இருவரும் சந்தித்து உரையாடினர்.

இந்த சந்திப்புகளின் போது, சிறந்த உறவினை பேணுவதற்கான தமது ஆர்வத்தை சீனா வெளியிட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.



# கார்பன் விலை அதிகரிப்புத் தொடர்பில் உரையாட அவசரக் கூட்டம் கூட்டுங்கள்!

## நோவா ஸ்கோட்சியா முதலவர் ரிம் ஹூஸ்டன் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் வேண்டுகோள்

நோவா ஸ்கோட்சியா, ஏப்ரல் 07

கார்பன் விலை அதிகரிப்பு தொடர்பில் உரையாடுவதற்கு அவசரக் கூட்டம் ஒன்றை கூட்டுமாறு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் நோவா ஸ்கோட்சியா பிரதமர் ரிம் ஹூஸ்டன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து பிரதமர் ட்ரூடோவுக்கு தாம் எழுதிய கடிதத்தினை தமது சமூக ஊடகத்தில் ஹூஸ்டன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

அனைத்து கனடியர்களுக்கும் வாழ்வதற்கு உகந்ததாக இருப்பதற்கு கார்பன் வரியை இல்லாது செய்யுமாறு ஹூஸ்டன் இந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

கார்பன் வரிக்கு மாற்றீடாக கரையோரப் பாதுகாப்பு, காலநிலை மாற்றம், சுத்தமான மின்சாரம் மற்றும் பசுமையான ஹைதரசன் தொடர்பிலான மாற்றுத் திட்டம் ஒன்றை கடந்த மாதம் ரிம் ஹூஸ்டன் முன்வைத்திருந்தார்.

ஹூஸ்டனின் திட்டத்தை தான் காணவில்லையெனவும், ஆனால் அது குறித்து கலந்துரையாடுவதற்கு தாம் தயாராக இருக்கிறார் எனவும் பிரதமர் ட்ரூடோ தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே, ஆறு மாகாணங்களைச் சேர்ந்த முதல்வர்கள் கார்பன் விலை தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாடுவதற்கு அவசர கூட்டத்தை கூட்டுமாறு கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஒன்ராரியோ சிறைகளில் 2023 இல் 50 உண்ணாவிரதப் போராட்டங்கள்

ஒன்ராரியோ, ஏப்ரல் 07

ஒன்ராரியோ முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் 2023ஆம் ஆண்டில் சுமார் 50 உண்ணாவிரதப் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தகவலறியும் சட்டத்தைப் பயன்படுத்தி இந்தத் தகவல்கள் பெறப்பட்டிருக்கின்றன.

இந்தத் தரவுகளுக்கு அமைய ஒன்ராரியோ சிறைகளில் இருந்த சிறைக்கைதிகள் ஆகக் குறைந்தது மாதமொன்றுக்கு ஒரு முறை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இதில் அரைவாசிக்கும் மேற்பட்ட உண்ணாவிரதப் போராட்டங்கள் ஒன்ராரியோவின் மத்திய பிராந்திய சிறைகளில் நிகழ்ந்துள்ளன.

ஒன்ராரியோ சிறைகளில் கட்டமைக்கப்பட்டதாக இவ்வாறான போராட்டங்கள் நிகழ்வதனை வெளிப்படுத்துவனவாக இந்தத் தரவுகள் இருக்கின்றன என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்கள் சொலிசிட்டர் ஜெனரலை தொடர்பு கொள்ள முயற்சித்த போதிலும், இது குறித்து மேலதிக தகவல்கள் எதனையும் அவர் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கனடாவில் நாகரிகமின்மை அதிகரிப்பு சகிப்புத் தன்மை குறைந்து செல்கிறது

## கியூபெக்கின் முன்னாள் முதல்வர் ஜீன் சாரெஸ்ட் கவலை



கியூபெக், ஏப்ரல் 07

கனடா முழுவதிலும் நாகரிகமின்மை அதிகரித்து வருவதாக கியூபெக்கின் முன்னாள் முதல்வர் ஜீன் சாரெஸ்ட் கவலை வெளியிட்டுள்ளார்.

முன்னாள் முதல்வர்கள், மாநகர முதல்வர்கள், அரசியல் தலைவர்கள், வர்த்தகர்கள் கையெழுத்திட்டுள்ள ஓர் திறந்த கடிதத்தில் பொது விவாதங்களை முறைப்படுத்துவதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசியல் பிரதிநிதிகளிடம் கோரியுள்ளார்.

இந்த கடிதத்திற்கு சமூக ஊடகத்தில் சிறந்த பதில் கிடைத்துள்ளதாக ஜீன் சாரெஸ்ட் தெரிவித்துள்ளார்.

கனடியர்களின் சகிப்புத் தன்மை குறைந்து செல்வதாகவும், குறிப்பாக மத்திய கிழக்கில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான மோதல்கள் தொடர்பில் மக்கள் கூருணர்வுடன் நடந்துகொள்ளவில்லையெனவும் இந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பான, உகந்த மற்றும் கண்ணியமான கனடாவை போஷிப்பதற்கான அரசியல் தலைவர்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்பு அவசியம் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் கருத்து சுதந்திரத்தினை சமூக ஊடகங்கள் துஷ்பிரயோகம் செய்கின்றன எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி முறைகளை கனடா நாட வேண்டிய அவசியம் வலியுறுத்து

பிரிட்டிஷ் கொலம்பியா,ஏப்ரல்07

கனடா அணுசக்தியை உள்ளடக்கிய புதுப்பிக்கத்தக்க மின்சாரத்திற்கான அனைத்து விருப்பங்களையும் கருத்தில் கொள்ளாவிட்டால், பசுமைத் தொழில்களை ஈர்க்கும் சந்தரப்பத்தை கனடா இழக்க நேரிடும் என புத்தாக்கம் மற்றும் தொழில்துறைக்கான கனடிய அமைச்சர் பிரான்சுவா-பிலிப்பே செம்பேன் தெரிவித்துள்ளார்.

21ஆம் நூற்றாண்டின் பொருளாதாரத்தில் நாட்டின் சாய்வை ஆதரிக்க வளர வேண்டிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரிவாக அணுசக்தியை தாம் கருதுவதாக ஆங்கில இணைய செய்திசேவை ஒன்றுக்கு கருத்து தெரிவித்த போது அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நீர்மின்சக்கதியிலும், அணுசக்தியிலும், காற்று மூலமான சக்தி பிறப்பாக்கியிலும் கவனம் செலுத்த வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

முதலீட்டாளர்கள் புதுப்பிக்கக் கூடிய சக்தி தொடர்பில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, புதுப்பிக்கக் கூடிய சக்தியில் முதலீடு செய்வது கனடாவிற்கு மிகவும் பயன்தரக் கூடியதாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.


# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

## Super Deal of this Week


### till April 7th

LOWEST PRICE LB 4.99$ Only at GUNAAM'S SUPER MARKET




Small Onion

LOWEST PRICE LB 1.49$ Only at GUNAAM'S SUPER MARKET




EggPlant

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET




Blue Fish

LOWEST PRICE 6.99$ Only at GUNAAM'S SUPER MARKET




ஊர் கோழி

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET



இறால்

LOWEST PRICE LB 5.99$ Only at GUNAAM'S SUPER MARKET



சுறா fish

## இந்த வாரம் Gunaam's super market தரும் Super Deal

| | | |
|---|---|---|
| Harischandra Pappadam | - | $1.00 |
| MR.Goudas Table Salt | - | $1.00 |
| MR.Goudas Sea Salt | - | $1.49 |
| Blue Sea Tin Fish | - | $1.99 |
| Baba Uppuma mix | - | $2.99 |
| Chocolate Swiss Roll | - | $3.99 |
| 200g Tamarind 5for | - | $5.00 |
| Nestum Seriyal | - | $5.99 |
| Kott mee Noodles 6for | - | $5.99 |
| Raigam Noodles 2for | - | $5.00 |
| 7lb Brown Sugar | - | $8.99 |
| 3lt MR.Goudas Sunflower oil | - | $8.99 |
| Maharaja Rice Flour | - | $8.99 |
| Niru அவித்த மா | - | $8.99 |
| AROY–D Coconut Milk Tin 4for | - | $10.00 |
| MR.Goudas Coconut Milk Powder 3for | - | $10.00 |
| Niru Tin Fish 4for | - | $10.00 |
| 900g maggi Coconut Powder | - | $11.99 |
| Maharaja Curry Powder | - | 11.99 |

| | | |
|---|---|---|
| Maharaja Basmati Rice | - | $13.99 |
| EggPlant | - | $1.491b |
| Drumstick | - | $4.991b |
| Small Onion | - | 4.991b |
| Rasavalli | - | $5.991b |
| Karunayam | - | $4.991b |
| Super deal gift mysoor Daal | - | $1.00 |

### Fish Market Special Sale

| | | |
|---|---|---|
| ஊர்க்கோழி | - | $6.99 |
| Ceylon விளைமீன் | - | $7.991b |
| Blue fish | - | $3.991b |
| இறால் | - | $3.991b |
| சுறா Fish | - | $5.991b |
| திரளி | - | $5.991b |
| Ceylon பாரை | - | $8.991b |
| Ceylon காரள் | - | $7.991b |
| KO King fish | - | $7.991b |
| KO Salmon fish | - | $7.991b |
| Sea Breem fish | - | $7.991b |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998

# 'த வைட்ஹோர்ஸ் ஸ்டார்' பத்திரிகை 124 வருட சேவையின் பின் மூடுவிழா!

யுகொன்,ஏப்ரல்07

யுகொன் மாகாணத்தில் 124 வருடங்களாக இயங்கி வந்த 'த வைட்ஹோர்ஸ் ஸ்டார்' என்கிற பத்திரிகை மூடப்படவுள்ளது.

மே 17ஆம் திகதியுடன் தமது பிரசுரம் நிறுத்திக் கொள்ளப்படும் என இந்தப் பத்திரிகையின் ஏப்ரல் 5ஆம் திகதி முதல் பக்கத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பத்திரிகையின் உரிமையாளர் உள்ளூரில் உள்ள சிறு வர்த்தகர்களிடம் இந்த பத்திரிகையை கைமாற்றுவதற்கு பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்த போதிலும், அதனால் பலன் கிடைக்காமையால் பத்திரிகையை மூடும் தீர்மானத்தை எடுத்துள்ளார் என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.




124 வருடங்களாக மக்களுக்கு செய்தியை கொண்டு சேர்த்த பத்திரிகை மூடப்படுவது பத்திரிகை ஊழியர்களுக்கு மாத்திரமன்றி, மக்களுக்கும் மிகவும் கவலைக்குரிய விடயம் என பத்திரிகையின் செய்திஆசிரியர் ஜிம் பட்லர் தெரிவித்துள்ளார்.

விநியோகம் குறைவு மற்றும் பெரும்பாலான விளம்பரதாரர்கள் சமூக ஊடகங்களை நோக்கி நகர்கின்றமை என்பனவே பத்திரிகையை மூடுவதற்கான பிரதான காரணங்கள் என இணையத்தள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மிசிசாகா விபத்தில் பெண்மணி மரணம்!

ஒன்ராரியோ, ஏப்ரல் 07

மிசிசாகா பகுதியில் நேற்று ஏப்ரல் 6ஆம் திகதி இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்தமையுடன், இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

காலை 9 மணியளவில் இரண்டு வாகனங்கள் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் மிசிசாகாவைச் சேர்ந்த 55 வயதான பெண்மணி ஒருவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்துக்குள்ளான வாகனம் ஒன்றில் பயணி இருக்கையில் இருந்து பயணித்தவரே உயிரிழந்துள்ளார்.

இந்த வாகனத்தைச் செலுத்திய பெண் சாரதி உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.








# சுவிஸ் பனிப்பாறைச் சரிவில் கனேடிய இளம்பெண் மரணம்

கடந்த வாரம் சுவிட்சர்லாந்தில் நிகழ்ந்த பனிப்பாறைச் சரிவில் கனேடிய இளம்பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளார் என சுவிஸ் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த திங்கட்கிழமையன்று, சுவிட்சர்லாந்திலுள்ள ஏயடயளை மாகாணத்திலுள்ள ணுநசஅயவவ என்னுமிடத்திலுள்ள பனிச்சறுக்கு ரிசார்ட் ஒன்றினருகில் பனிப்பாறைச்சரிவு ஏற்பட்டது. அதில், மூன்று பேர் கொல்லப்பட்டார்கள். உயிரிழந்தவர்களில் ஒருவர் கனடா நாட்டவரான இளம்பெண் என சுவிஸ் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

அந்தப் பெண்ணுடன், 15 வயது அமெரிக்க இளைஞர் ஒருவரும், 58 வயதான சுவிஸ் நாட்டவர் ஒருவரும் கூட பனிப்பாறைச்சரிவில் சிக்கி உயிரிழந்துள்ளார்கள்.

இந்நிலையில், 30 வயது ஆண் ஒருவரும் மாயமாகியுள்ளார் எனத் தற்போது தகவல் வெளியாகியுள்ளது. அவர் பனிக்கு அடியில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. சம்பந்தப்பட்டவர்கள் யாருடைய பெயரையும் பொலிஸார் வெளியிடவில்லை.



# கியூபெக்கின் நகர சபை ஒன்றில் 3 உறுப்பினர்கள் இராஜினாமா!

கியூபெக், ஏப்ரல் 07

கியூபெக்கின் மற்றுமொரு நகரத்தைச் சேர்ந்த நகர சபை உறுப்பினர்கள் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளனர்.

கியூபெக்கிற்கு கிழக்கே உள்ள ஸ்ரெபெட்ரோநில் நகர சபையின் மூன்று உறுப்பினர்களே இந்த வாரம் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

நூலக தன்னார்வ தொண்டன் ஒருவரின் மதுபான செலவீனம் தொடர்பில் ஏற்பட்ட இணக்கமின்மையே இந்தப் பதவி விலகலுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொது மக்களுக்கும் நகர சபை ஊழியர்களுக்கும் இடையில் கடந்த சில மாதங்களாக இது தொடர்பில் விவாதம் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையிலேயே பதவி விலகல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பதவி விலகலுக்கான உண்மையான காரணம் குறித்து நகர சபை முதல்வர் எவ்வித விவரங்களையும் வெளியிடாத போதிலும், பொது மக்கள் இந்தப் பதவி விலகலை வரவேற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# கனடாவில் பெண்களுக்கு இனிமேல் கருத்தடைச் சாதனங்கள் இலவசம்!

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிப்பு

கனடாவில் பெண்கள் பயன்படுத்தும் கருத்தடை மாத்திரைகள் முதலான அனைத்து கருத்தடை சாதனங்களும் இலவசமாக்கப்பட உள்ளன எனக் கனடா அரசு தெரிவித்துள்ளது.

பெண்கள் தங்களுக்குத் தேவையான கருத்தடை சாதனங்களைப் பெற பணம் தடையாக இருக்கக்கூடாது, கருத்தடை முறைகளை அவர்கள் சுதந்திரமாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார் கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ.

ஆகவே, கருத்தடை சாதனங்களை இலவசமாக்க உள்ளோம் என எக்ஸில் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார் அவர்.

அத்துடன், கனடா துணை பிரதமரான Chrystia Freelandk;, கனடாவில் வாழும் இனப்பெருக்க வயதிலிருக்கும் 9 மில்லியன் பெண்களுக்கும், கருவுறுதலைத் தடுக்க பயன்படுத்தப்படும் மாத்திரைகள், உடலுக்குள் பொருத்திக்கொள்ளக்கூடிய கருத்தடை சாதனங்கள் முதலான அனைத்து கருத்தடை சாதனங்களுக்குமான செலவையும் கனடா அரசே ஏற்கும் என்று கூறியுள்ளார்.